# வடக்கு மாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2016

வடக்கு மாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவையின் தரம் III பதவிக்கு காணப்படும் **52** வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உரிய தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **30.06.2016** ஆகும்.

## 02 ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

02.1 அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமாகும்.

02.2 இவை இடமாற்றுசேவைகளாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

## 03 பொதுத் தகைமைகள்

03.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

03.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலினை சமர்ப்பித்தல் வேண்டும்)

03.3 சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

## 04 ஆட்சேர்ப்பு முறை

எழுத்துப் பரீட்சையில் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றுக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையில் பரீசிலிக்கப்படும். இதன் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தேவையான தகைமைகள் இல்லையென தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடாத்துவது கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். நியமனத்திற்கான தெரிவின்போது நிரந்தர வதிவிடம் கவனத்திற்கொள்ளப்படும். இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கத்தவறும் சான்றுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட மாட்டாது.

04.1 இவ்விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன் கோரப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04.2 வெற்றிடத்தின் 03% மாற்றுத்திறனாளிகளுக்காக (வலது குறைந்தோர்) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது (வலது குறைவானது) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

04.3 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பனவற்றிற்கு அமைவாக சேவையில் இணைந்து 05 வருடங்களுக்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித்தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

## 05 பரீட்சைக் கட்டணம்

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **500/-**ஐ **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **3401** என்ற வைப்பு கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 06 விண்ணப்பிக்கும் முறை

06.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களிற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ X 29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **30.06.2016** திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

06.2 ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பித்தால் மட்டுமே அவரது சேவை கருத்திற்கொள்ளப்படும்.

06.3 அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக்குறிப்பிடல் வேண்டும்.

06.4 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி, முன்னோடிப்பிரதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

06.5 பரீட்சைத் திகதி தொடர்பாக பத்திரிகை மூலம் அறிவித்தலொன்று வழங்கப்படும்.

06.6 விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல :*021 221 9939* )

## 07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 08. பரீட்சை நிலையம்

பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| யாழ்ப்பாணம் | **01** |
| வவுனியா | **03** |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

## 09. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள்

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

1. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. பொது நிர்வாக அமைச்சின் 01/2012ம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய இப்பதவிக்குப் பொருத்தமான தேசிய தொழில் தகைமை மட்டம் 05 (NVQ Level – 05) தொழில்நுட்ப சான்றிதழ் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

3. மேற்படித் தொழிநுட்ப தகைமைகளுக்குச் சமமான அல்லது அதற்கு உயர்வானதென மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அங்கிகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தொழிநுட்பத் தகைமைகள்.

## 10. வயதெல்லை

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 11. சம்பள அளவுத்திட்டம்

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **(MT-1-2016)** க்கு ஏற்ப தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **(29,840 – 10 x 300 – 11 x 350 – 10 x 560 – 10 x 660 – Rs. 48,890/-)** ஆகும். (ரூபா 30,740 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல்வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்

## 12. பரீட்சார்த்தியின் ஆள்அடையாளம்

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

## 13. எழுத்துப் பரீட்சை

இப் பரீட்சை போட்டிப்பரீட்சையாக இருப்பதனால் நியமனத்திற்கு தகைமை பெறுபவர் இரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகள் வீதம் பெறுக்கொள்வதன் மூலமே தேர்ச்சி பெறுவர்.
இப்பரீட்சையானது தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிமூலங்களிலும் நடாத்தப்படும். இவ்வெழுத்துப்பரீட்சையின் வினாப்பத்திர விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## 14. பாடவிதானம்

**தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை.**

**பொது உளச்சார்பு :** **[01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்]**
இவ் வினாத்தாள் விண்ணப்பதாரியின் தர்க்கரீதியான திறன், பகுப்பாய்வுத் திறன், முடிவெடுக்கும் இயலுமை என்பன தொடர்பான அறிவினை அளவிடுவதாக அமையும்.

**பொதுஅறிவு** **[01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்]**
**(பதவியுடன் தொடர்புடைய தொழில்நுட்பம் மற்றும் விடய அறிவு)**
இவ் வினாத்தாள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு, காலநிலை வலயம் தொடர்பான அறிவு, மண் மற்றும் தரவர வளம், நெல் உற்பத்தி, ஏனைய உப உணவுப் பயிர்கள், மரக்கறி உற்பத்தி, பழவகை, பயிர்ப் பாதுகாப்பு, மண் இரசாயனம், நீர் வடிப்பும் அதன் முக்கியத்துவமும், பண்ணைத் தொழில்நுட்பம், தேனீ வளர்ப்பு, தாவர வளர்ப்பும் நில அழகுபடுத்தலும், பயிர்ச்செய்கைப் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்பு, விவசாய விரிவாக்கம், இழைய வளர்ப்பு, தாவர பாதுகாப்புச் சட்டம் தொடர்பான அறிவு, தாவர பாதுகாப்பு உயிரியல் தொழில்நுட்பம், விவசாய அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனமும் நீர் முகாமைத்துவமும் போன்ற விடயங்கள் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினாலேயே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ்மொழி, சிங்கள மொழி, உரைகளுக்கிடையிலான ஏதேனும் வேறுபாடு காணப்படின் தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

***ரு.வரதலிங்கம்.***
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.